# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.CC.77/2025**

| Deposition of Name | சுந்தர்ராஜன் | Prosecution | LW-13 as PW-11 |
|---|---|---|---|
| Father Name | கருத்தப்பிள்ளை | Defence | |
| Village | திட்டைரோடு | Taluk | சீர்காழி |
| District | மயிலாடுதுறை | Age | 51/2025 |

Solemnly affirmed by Tmt.K. Geetha, Grade 3 bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day

**05.08.2025 1 வது எதிரி ஆஜர்**

**சத்தியபிரமாணம் பெறப்பட்டது.**

**முதல் விசாரணை**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து டிரைவராக வேலை செய்து வருகிறேன். கடந்த 2024 ம் வருடம் எனது அண்ணனின் மனைவி வாசுகி என்வருக்கு உடல் நிலை சரியில்லாத காரணத்தினால் என் அண்ணன் மகன் சிவச்சந்திரன் என்வர் எனது அண்ணியை சிகிச்சைக்காக சிதம்பரம் RMMCH க்கு அழைத்து சென்றார். அப்போது எதிரி நிஷாந்தினி என்பவர் எனது அண்ணன் மகனிடம் தான் ஒரு டாக்டர் என்றும் நான் MS முடித்திருப்பதாகவும் கூறி எனது அண்ணியை அவர் கவனித்துக்கொள்வதாக தெரிவித்துள்ளார். அந்த சமயம் அவர் எனது அண்ணன் மகனிடம் தொலைபேசி எண்ணை பெற்றுக்கொண்டுள்ளார். அதன் பிறகு இருவரும் ஒரு வருட காலமாக காதலித்து வந்தார்கள்.

2. அந்த விவகாரம் ஒரு வருடம் கழித்து எனக்கு தெரியவந்தது. நான் அந்த பெண்ணை அழைத்து கொண்டு வருமாறு கூறினேன். நான் அந்த பெண்னை அழைதது வந்த உடன் விசாரித்தேன். அவர் எந்த ஊர் மற்றும் எந்த ஜாதி என விசாரித்தேன். அதற்கு அவர் தான் மதுரை என்றும் தேவர் ஜாதியை சேர்ந்தவர் என்றும் அவருடைய அண்ணன் MLA என்றும் கூறினார். நான் அவரிடம் ஆதார் காடும் பள்ளி மாற்று சான்றிதழும் தருமாறும் அவ்வாறு கொடுத்தார் பதிவு திருமணம் செய்து வைப்பதாக கூறினேன் . ஆனால் அவர் அதற்கு ஒப்புக்கொள்ளவில்லை.

ஒரு 10 நபர்களை வைத்து கோயிலில் தாலி கட்டினால் போதும் என்றும் பிறகு திருமணத்தை பதிவு செய்து கொள்ளலாம் என்றும் அந்த பெண் கூறினார். சிவசந்திரன் MA.B.Ed. வரை படித்து ICICIவங்கியில் மேலாளராக இருந்தார். ஆகையால் நான் சொந்த பந்தங்களை எல்லாம் அழைத்து திருமணத்தை சிறப்பாக செய்ய வேண்டும் என்று கூறி அவ்வாறு திருமணம் நடத்த வேண்டும் என்று ரூ.5,00,000/- வெளி நபர்களிடம் கடன் வாங்கினேன்.

3. ஜனவரி மாதம் 20 ஆம் தேதி ராஜேஸ்வரி திருமண மண்டபத்தில் வைத்து அவர்களுக்கு திருமணம் நடந்தது. பிறகு, புத்தூரை சேர்ந்த நெப்போலியன் என்கிற நபர் சீர்காழி காவல் நிலையத்தில் அந்த பெண்மணி தன்னை ஏற்கனவே திருமணம் செய்து ஏமாற்றியதாக சொல்லி ஒரு புகாரை கொடுத்தார். அதன் பேரில் சீர்காழி போலீசார் எங்கள் வீட்டிற்கு வந்தார்கள். எங்களை அவர்கள் விசாரித்த பிறகு

4. நாங்களே அந்த பெண்மணியை 26.01.2025ம் தேதி சீர்காழி மகளிர் காவல் நிலையத்தில் ஒப்படைத்து விட்டோம். அங்கு போலீசார் விசாரித்த போது தான் அந்த பெண்மணி தனக்கு ஏற்கனவே நான்கு முறை திருமணம் நடந்துள்ளது என்று கூறியுள்ளார். எங்களுக்கும் அது பற்றி எல்லாம் அப்போது தான் தெரிந்தது. தற்போது என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ளது என்னுடைய கையொப்பம் தான். அதை நான் மேற்படி சமயத்தில் காவல் நிலையத்தில் வைத்து செய்தேன். (**அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது) இவ்வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.**

**குறுக்கு விசாரணை:**

மேற்படி விஷயங்களை எல்லாம் என் அண்ணன் மகன் என்னிடம் சொல்ல வில்லை என்றால் சரிதான். அந்த பெண்மணியை நான் விசாரித்த போது என் அண்ணன் மகனும் என்னோடுதான் இருந்தாரா என்றால் ஆமாம். இந்த விபரம் பற்றி எல்லாம் போலீசார் என்னை விசாரித்த போது அவர்களிடம் சொன்னேனா என்றால் சொன்னேன். உண்மையில் எனக்கு எந்த விபரமும் தெரியாது என்றாலும் இந்த வழக்கின் புகார்தாரர் எனது அண்ணன் மகன் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எனக்கு இவ்வழக்கு சம்பந்தமாக எதுவும் தெரியாது என்றாலும் போலீசார் சொல்லிக் கொடுத்ததன் அடிப்படையில்

பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. காவல் நிலையத்தில் சாட்சிக்காக என்னிடம் கையொப்பம் வாங்கினார்களா என்றால் வாங்கினார்கள். நான் இந்த வழக்கில் சாட்சி என்பதற்காக கையொப்பம் வாங்கினார்களா என்றால் ஆமாம். காவல் நிலையத்தில் வைத்து தான் நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான்.